மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். மருதாசலம் : குறிச்சி பேரூராட்சி முன்பே நகராட்சியாக ஆக்கப்பட்டு மறுபடியும் பேரூராட்சியாக ஆக்கப்பட்டிருக்கிறது. நகராட்சியாக இருப்பதற்கான ஜனத்தொகை அந்தப் பகுதியில் இருப்பதால் அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : குறிச்சி பேரூராட்சியும், அங்குள்ள மக்களும் அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி வரவேண்டுமென்றால், அதற்கான இடவசதி, தளவாட வசதி ஆகியவற்றை நிபந்தனையில் கண்டுள்ளபடி அளிக்க முன்வரவேண்டும். அத்தகைய வசதிகள் அளிப்பதாகவும், உயர்நிலைப்பள்ளி அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்பதான கோரிக்கை எதுவும் குறிச்சி பேரூராட்சியில் இருந்து வரவில்லை. அவர்களும் அதுபோல விண்ணப்பம் கொடுத்து, விதிகளில் கண்டுள்ள வசதிகளை அளிக்க முன்வந்து, போதுமான மாணவர்களும் இருந்தால் மற்ற இடங்களில் உயர்நிலைப் பள்ளி துவங்கப்படுவதுபோல அங்கும் துவங்க ஆவன செய்யலாம்.

திரு. என். மருதாசலம் : அங்கு சாதாரணப் பள்ளிகளிலேயே இன்றையதினம் ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் படிக்கிறார்கள். அதிகமான மாணவர்கள் தொகை அங்கே இருக்கிற காரணத்தினால் அரசு ஆரம்பிக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான அடிப்படை நிபந்தனை வசதிகளைச் செய்துதர குறிச்சி பேரூராட்சியும், மக்களும் முன்வந்தால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்

* 531 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள் ஆட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வரதம்பட்டு பஞ்சாயத்தை வரதம்பட்டு, திருவாளப்புத்தூர் ஆக இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தற்போது அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

* 532 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள் ஆட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் கூட்டுமன்றப் பகுதியிலுள்ள திருச்சிற்றம்பலம் பஞ்சாயத்தினை இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.